MAY 2025 **P/ID 35319/PTL2J**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. "எல்லே இலக்கம்"- இவ்வரி இடம்பெறும் இலக்கியம் எது?

2. பிறப்புநிலை விளக்கம் என்றால் என்ன?

3. திறனாய்வு என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?

4. படைப்பு வழித் திறனாய்வு என்றால் என்ன? சான்று தருக.

5. விதிமுறைத் திறனாய்வின் நோக்கங்களுள் இரண்டினைச் சுட்டுக.

6. வடமொழி கூறும் உணர்ச்சியின் வகைகள் எத்தனை?

7. இணையொப்பு என்றால் என்ன? சான்று தருக.

8. முதற்பொருள்கள் எவையெவை?

9. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்"- இவ்வரியினைப் பகரும் இலக்கியம் எது?

10. பஞ்சமகா காவியம் என்றால் என்ன?

11. சிறுகதையின் இலக்கணமாக எட்கர் ஆலன்போர் கூறுவனவற்றை எழுதுக.

12. கதைப்பின்னல் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

13. இலக்கியம் என்ற சொல்லை வரலாற்று நிலையில் மதிப்பிடுக.

14. சொற்பொருளியல் விளக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

15. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வினைச் சான்றுகளுடன் விளக்குக.

16. இலக்கியத் தோற்றத்தில், வடிவம் எங்ஙனம் முக்கியத்துவம் பெறுகின்றது?

17. அகக்கோட்பாடு என்றால் என்ன? விளக்குக.

18. பெருங்காப்பியத்திற்கான இலக்கணத்தைத் தெளிவுறுத்துக.

19. நாவலுக்கும் சிறுகதைக்குமான நுட்பமான வேறுபாடுகளை அடையாளப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. திறனாய்வாளரின் தகுதிகளையும் திறன்களையும் தெளிவுபடுத்துக.

21. இலக்கியத் தோற்றத்திற்கான கொள்கைகளை விரித்துரைக்க.

22. இலக்கியத்தில் கற்பனை பெறுமிடத்தை ஆய்க.

23. பரணி இலக்கியத்தின் அமைப்பினையும் தோற்றப் பின்புலத்தையும் ஆய்ந்துரைக்க.

24. புதுக்கவிதையின் இலக்கியக் கொள்கைகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————